# 6 ஆயிரம் பெண்கள் பங்கேற்ற 'பிங்கத்தான்' ஓட்டம்

சென்னை, ஏப். 14—
புற்றுநோய் குறித்த விழிப்புணர்விற்காக நடத்தப்பட்ட 'பிங்கத்தான்' ஓட்டத்தில், 6,000க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்றனர்.

புற்றுநோய் குறித்து, பெண்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், 'பிங்கத்தான்' அமைப்புடன் 'மியாட்' மருத்துவமனை இணைந்து, பிங்கத்தான் ஓட்டத்தை நேற்று நடத்தியது. தீவுத்திடலில் இருந்து கலங்கரை விளக்கம் வரை வந்து, மீண்டும் தீவுத்திடலை வந்தடையும் வகையில், 'பிங்கத்தான்' ஓட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அதில், 6,500 பெண்கள் பங்கேற்றனர்.

அதில், 10 கி.மீ., ஓட்டத்தில், விஜய லட்சுமியும், 5 கி.மீ., ஓட்டத்தில், அபிநயாவும், 3 கி.மீ.,ல் கிருபாவும் முதலிடம் பெற்றனர்.




மார்பக புற்றுநோய் குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், சென்னை மெரீனாவில், 'பிங்கத்தான்' ஓட்டம், நேற்று நடந்தது.